1986 மே 6]

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே இதுபோன்ற பணி புரிகிற கான்ட்ராக்ட் லேபரர்ஸ் எத்தனை ஆண்டுக்காலமாக பணிபுரிந்து வருகிறார்கள், அவர்களிடம் எந்தத்தன்மையான வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற வகையில் மின் தொடர்புக் கம்பிகளை நிர்மாணிப்பது கட்டுமானப் பிரிவு. அதேபோல் மின் உற்பத்தி நிறுவனங்களில் 'கோல் ஹாண்ட்லிங், ஆஷ் ஹாண்ட்லிங்' போன்றவைகளில் நியமிக்கப்படுகிறார்கள். எத்தனை ஆண்டுக்காலம் என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

கடலூரில் அனல் மின் நிலையம்.

667—(* வினா எண் 9073) **திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் துவங்க இருக்கும் புதிய அனல் மின் நிலையம் எவ்வளவு ஏக்கர் நிலப் பரப்பளவில் எவ்வளவு செலவில் உருவாகிறது ?

(ஆ) அதன் மூலம் எவ்வளவு மெகாவாட் மின்சாரம் பெற முடியும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ரூ. 630 கோடி மதிப்பீட்டில் 800 ஹெக்டேர் (2000 ஏக்கர்) நிலப் பரப்பில் முதல் கட்டத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளும், இரண்டாவது கட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட இரு பிரிவுகளும், இறுதிக் கட்டத்தில் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் கொண்ட மேலும் இரண்டு பிரிவுகளும் கொண்ட அனல் மின்நிலையம் அமைக்க மின்வாரியம் திட்ட அறிக்கையை தயாரித்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் அமையயிருக்கின்ற அனல் மின் நிலையத்தின் வேலைகள் நடப்பு ஆண்டிலே துவங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்போதுதான் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்திய அரசை நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

திரு. துரை அன்பரசன் : தலைவர் அவர்களே, துவங்கப்பட இருக்கின்ற மின் நிலையம், எந்த நாட்டினுடைய உதவியோடு செயல்பட இருக்கிறது? அத்துடன் எந்தெந்த வகைகளில் வெளி நாட்டு நிறுவனம் நமக்கு உதவி செய்ய காத்திருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, கடலூரிலே தயாராக காத்திருக்கிற அதிலே உற்பத்தியாகின்ற மின்சாரம், பொதுவாக தமிழகத் தேவைக்குப் பயன்படுத்தப்படுமா, அல்லது வெளி மாநிலங்களுக்கும் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமைப்பதற்காக சோவியத் யூனியன் உதவி தர முன் வந்துள்ளது. அதைப் பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் இந்திய அரசுக்கு 6—4—1986 அன்று கடிதம் எழுதி இருக்கிறார். சோவியத் நாட்டினுடைய தலைவர் திரு. கோர்பச்சேவ் அவர்கள் இங்கே டெல்லிக்கு வருகிறபோது இந்தத் திட்டத்தையும் சேர்த்து அதிலே பேசப்படவேண்டும் என்று அந்தக் கடிதத்தின் மூலம் நாம் இந்திய அரசைக் கேட்டிருக்கிறோம். கடலூரில் உற்பத்தியாகக் கூடிய மின்சாரம் தமிழ்நாட்டிற்கு மட்டும்தான் பயன்படும்.